**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
*Ang Mo Kio Tamil Methodist Church*

*13th ஜூலை / July 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service*

| | |
|---|---|
| **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திரு. லூயிஸ் ஐசக் குமார்**<br>Mr. Louis Isack Kumar |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திரு. லூயிஸ் ஐசக் குமார்**<br>Mr. Louis Isack Kumar |
| **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**திவ்ய காளச் சத்தம் கேட்க**

*1. திவ்ய காளச் சத்தம் கேட்க*
*இயேசு தோன்றும் காலத்தில்*
*ஆவலாய் அக்காட்சி*
*கண்டானந்திப்பேன்;*
*மீட்கப்பட்ட தாசர் ஒன்று கூடி*
*மோட்ச லோகத்தில்*
*நிற்கும்போது நானும்*
*கூடவே நிற்பேன்.*

**தாசர் விண்ணில் ஒன்றுகூடி,**
**தாசர் விண்ணில் ஒன்றுகூடி,**
**தாசர் விண்ணில் ஒன்றுகூடி,**
**நிற்கும்போது நானும்**
**கூடவே நிற்பேன்.**

*2. நித்ரை செய்த பக்தர் உயிர்த்து*
*வானமேறி யேகுவார்*
*மீட்பர் மாண்பைக்கண்டு*
*ஆரவாரிப்பேன்,*
*விசுவாசிகள் எல்லாரும்*
*விண்ணில்*
*கூடி வாழுவார்*
*அந்த நாளில் நானும்*
*கூட வாழுவேன்*

*3. இயேசுநாதரின் பேரன்பை*
*எங்கும் கூறும்படிக்கே*
*சோர்வில்லாமல் வேலை செய்து*
*ஜீவிப்பேன்*
*பின்பு, தாசர் ஒன்றுகூடி தேவ*
*சந்நிதியிலே*
*நிற்கும்போது நானும்*
*கூடவே நிற்பேன்.*

| | |
|---|---|
| **மாறி வாசித்தல் *28*ம் ஞாயிறு**<br>***“சங்கீதம் 91”*** | **சபையார் இணைந்து**<br>Congregation |

“சர்வ வல்லவருடைய நிழல்”

Psalter Reading “Psalm 91”

| | |
|---|---|
| **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord’s Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**தேவ சாயல் ஆக மாறி**

**தேவ சாயல் ஆக மாறி**
**தேவனோடிருப்பேன் நானும்**

*1. அந்த நாளும் நெருங்கிடுதே*
*அதிவிரைவாய் நிறைவேறுதே*
*மண்ணின் சாயலை நான்*
*களைந்தே*
*விண்ணவர் சாயல் அடைவேன்*

*2. பூமியின் கூடாரம் என்றும்*
*பெலவீனமே அழிந்திடுமே*
*கை வேலை யல்லாத பொன்வீடு*
*கண்டடைந்து வாழ்ந்திடுவேன்*

*3. சோரும் உள்ளான மனிதன்*
*சோதனையில் பெலமடைய*
*ஆற்றித் தேற்றிடும்*
*தேற்றரவாளன்*
*ஆண்டவர் என்னோடிருப்பார்*

*4. ஆவியின் அச்சார மீந்தார்*
*ஆயத்தமாய் சேர்ந்திடவே*
*ஜீவனே எனது கிறிஸ்தேசு*
*சாவு எந்தன் ஆதாயமே*

*5. காத்திருந்து ஜெபிப்பதினால்*
*கழுகு போல பறந்தெழும்பி*
*ஜீவயாத்திரை ஓடி முடித்து*
*ஜீவ க்ரீடம் பெற்றிடுவேன்*

| | |
|---|---|
| **பூலோகத்தாரே யாவரும்**<br>Doxology | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **திருமறைப் பாடம்**<br>***I கொரிந்தியர் 15 : 35-38, 42-43***<br>Scripture Reading<br>1 Cor 15 : 35-38, 42-43 | **மாஸ்டர். ஜேடன் மாத்திஸ் ராபின்சன்**<br>Master. Jadon Mathis Robinson |
| **அருளுரை**<br>Sermon | **போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்**<br>Pastor. Jesudoss Charles |

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

**பரலோகமே என் சொந்தமே**

**பரலோகமே என் சொந்தமே**
**என்று காண்பேனோ**
**என் இன்ப இயேசுவை என்று**
**காண்பேனோ!**

1. வருத்தம் பசி தாகம்
மன துயரம் அங்கே இல்லை
விண் கிரீடம் வாஞ்சிப்பேன்
விண்ணவர் பாதம் சேர்வேன்

2. சிலுவையில்
அறையுண்டேன்
இனி நானல்ல இயேசுவே
அவர் மகிமையே
எனது இலட்சியமே

3. இயேசு என் நம்பிக்கையாம்
இந்த பூமியும் சொந்தமல்ல
பரிசுத்த சிந்தையுடன்
இயேசுவை பின்பற்றுவேன்

4. ஓட்டத்தை ஜெயமுடன்
நானும் ஓடிட அருள் செய்வார்
விசுவாச பாதையில்
சோராது ஓடிடுவேன்

5. பரம சுகம் காண்பேன்
பரன் தேசம் அதில் சேர்வேன்
இரா பகல் இல்லையே
இரட்சகர் வெளிச்சமே

6. அழைப்பின் சத்தம்கேட்டு
நானும் ஆயத்தமாகிடுவேன்
நாட்களும் நெருங்குதே
வாஞ்சையும் பெருகுதே

7. பளிங்கு நதியோரம்
சுத்தர் தாகம் தீர்த்திடுவார்
தூதர்கள் பாடிட
தூயனை தரிசிப்பேன்.

**அறிவிப்புகள்**
Announcements

✝ **மனப்பாட வசனம்** — **சபையார் இணைந்து**
Memory Verse — Congregation
**யோவான் 17 : 17 - 18**
John 17 : 17 – 18

***17. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.***
***18. நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**